நினைக்க முத்திதரும் திருத்தலம் !

உ
சிவமயம்
அருள்மிகு அண்ணாமலையார் துணை

பஞ்சபூத தலங்களில் அக்னித்தலம்!!









தமிழ்நாடு அரசு - இந்து சமய அறநிலையத்துறை

## திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில்

# 2017-ஆம் ஆண்டு திருக்கார்த்திகை தீபத்திருவிழா பத்திரிகை



**சம்பந்தர்**

பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்
தூமா மழைநின்று அதிர வெருவித் தொறுவின் நிரையோடும்
ஆமாம் பிணைவந்து அணையும் சாரல் அண்ணாமலையாரே

**சுந்தரர்**

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே
ஆனைக் காவில் அரனே பரனே அண்ணாமலையானே
ஊனைக் காவல் வைவிட்டு உன்னை உகப்பார் உணர்வாரே



**அண்ணாமலையார் துதி**

ஒருமானைக் கரத்தினிலைத் தொருமானைச் சிரத்தினிலைத் தலைமேலேறும்
தருமானை பிடத்தினில் வைத்தருள்வானைப் பவள நெடுஞ் சயிலம் போல
வருமானை முகத்தானை யளித்தானைப் பெருமானை மகிழ வேணும்
பெருமானை அருணகிரிப் பெம்மானை அடிபணிந்து பிறவி தீர்ப்பாம்

**தீபதரிசன பலன்**

கார்த்திகைக்கு கார்த்திகைநாள் ஒருசோதி மலைநுனியிற் காட்டா நிற்போம்
வாய்த்தவருந் சுடர்காணிற் பசிபிணியில்லாதுலகில் மன்னி வாழ்வார்
பார்த்தவர்க்கு மருந்தவர்க்கு மிடையூறு தவிர்ந்திது பணிந்தோர் கண்டோர்
கோத்திரத்தி லிருபத்தோர் தலைமுறைக்கு முத்திவரங் கொடுப்போமென்றார்

**குகை நமசிவாயர்**

வரம்பலிக்கும் மெய்ஞ்ஞான வாழ்வே பலிக்கும்
திறம்பலிக்கும் செல்வம் பலிக்கும் - உரம்பலிக்கும்
சோணாசலனைச் சுவாமிதனை உள்ளத்தே
காணார் கருத்தென் கருத்து



**அப்பர்**

பைம்பொனே பவளக்குன்றே பரமனே பால்வெண் ணீற்றாய்
செம்பொனே மலர் செய்பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியணா மலையுளானே
எம்பொனே உன்னையல்லால் ஏதும் நான் நினைவிலேனே

**மாணிக்கவாசகர்**

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணாமலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்



## ஞானத் தபோதனரே! நற்குடியின் வாழ்க்கையரே !! மானக்கலையுணரும் மாணவரே !!! வம்மின்

"பாருக்குமிடமெங்கும் ஒருநீக்கமற நிறைகின்ற பரிபூர்ணானந்தமே நம் பாரத நாட்டுப் பெருமக்கள் கண்ட பரம்பொருள், இப்படி ஒரு பெரும் மெய்ப்பொருள் உண்டென்பதிலும் அதுவே உலக விளக்கத்திற்கெல்லாம் மூல காரணம் என்பதிலும் எந்நாட்டு அறிஞரும் மாறுபடவில்லை.

அப் பரம்பொருளைவிட்டு அகல அகல துன்பமும், அணுக அணுக இன்பமும் உண்டாகும் என்பர் மேலோர். அதனை அணுகுவதற்கான வழிகளில் அன்பு நெறியே எளியதும், இனியதும் மக்களிற் பெரும்பாலோருக்கும் வாய்ப்பதற்கியல்வதுமாகும்.

இவ் அன்பு நெறி நின்ற பெருமக்கட்கு அப்பரம்பொருள் இறங்கிவந்து அருள் செய்த இடங்களே திருத்தலங்கள் என இசைக்கப்பெறுகின்றன. இத்தலங்களில் தலைசிறந்தது திருவண்ணாமலை "ஞானத் தபோதனரை வாவென்று அழைக்குமலை அண்ணாமலை" என்றார் குருதேவர்

இப் பெருந்தலத்தில் வீற்றிருக்கும் "உண்ணாமுலை உமையாளோடும் உடனாகிய அண்ணாமலையண்ணலின்" ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் கார்த்திகை தீபப் பெருவிழா கீழ்கண்டவாறு நிகழவிருக்கின்றது உங்கள் அனைவரையும் "மெய்யடியார்களே ! விரைந்துவம்மின்" என மனமுவந்து அழைக்கின்றோம் வாருங்கள். வந்திருந்து எங்களோடு இறை பணியிலும் பங்குகொண்டு, கண்டு, கேட்டு, உகந்து உருகிப் பெருவாழ்வும் பேறும் பெருவீர்களாகவென வேண்டுகிறோம்.

அன்புடையீர்,

"நினைத்தாலே முக்தியளிக்கும் திருத்தலமாகவும்", பஞ்சபூத தலங்களில் "அக்னி தலமாகவும்" சிறப்புடன் விளங்கும் இத்திருத்தலத்தில் 2017-ஆம் ஆண்டின் திருக்கார்த்திகை தீபத்திருவிழா நாளது 20.11.2017 திங்கட் கிழமையன்று மாலை அருள்மிகு துர்க்கையம்மன் உற்சவத்துடன் தொடங்கி கீழ்காணும் விவரப்படி திருவிழா நடைபெறவுள்ளது.

திருக்கார்த்திகை தீப பிரம்மோற்சவத்தின் தொடக்கமாக நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ஸ்ரீ ஹேவிளம்பி வருடம் கார்த்திகை மாதம் 7-ஆம் தேதி (23.11.2017) வியாழக்கிழமை சுக்லபட்சம் பஞ்சமி திதி, பூராடம் நட்சத்திரம், அமிர்தயோகம் கூடிய சுபதினத்தில் விடியற்காலை 4.00 மணிக்குமேல் 5.30 மணிக்குள் துலா லக்கினத்தில் கொடியேற்றம் நடைபெறும்.

### திருவிழா விவரம்

| ஆங்கில வருடம் மாதம் தேதி | தமிழ் மாதம் / தேதி | கிழமை | திருவிழா விவரம் | காலை உற்சவ விவரம் | மாலை / இரவு உற்சவ விவரம் |
|---|---|---|---|---|---|
| 20.11.2017 | கார்த்திகை 04 | திங்கள் | அருள்மிகு துர்க்கையம்மன் உற்சவம் | - | அருள்மிகு துர்க்கையம்மன் - காமதேனு வாகனம் |
| 21.11.2017 | 05 | செவ்வாய் | அருள்மிகு பிடாரியம்மன் உற்சவம் | - | அருள்மிகு பிடாரியம்மன் - சிம்ம வாகனம் |
| 22.11.2017 | 06 | புதன் | அருள்மிகு விநாயகர் உற்சவம் | - | அநுக்ஞை, விக்நேஸ்வர பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம் விநாயகர் - வெள்ளி மூஷிக வாகனம், சண்டிகேசுவரர் ரிஷப வாகனம் |
| 23.11.2017 | 07 | வியாழன் | முதல் திருவிழா | பஞ்சமூர்த்திகள் - வெள்ளி விமானங்கள் - | பஞ்சமூர்த்திகள் - மூஷிகம், மயில், வெள்ளி அதிகார நந்தி, ஹம்சம், சிம்ம வாகனம் |
| 24.11.2017 | 08 | வெள்ளி | இரண்டாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர்-தங்க சூரியபிரபை வாகனம் - | பஞ்சமூர்த்திகள் - வெள்ளி இந்திர விமானங்கள் |
| 25.11.2017 | 09 | சனி | மூன்றாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர் - பூத வாகனம் - | பஞ்சமூர்த்திகள் - சிம்ம வாகனம், வெள்ளி அன்னவாகனம் |
| 26.11.2017 | 10 | ஞாயிறு | நான்காம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர் - நாக வாகனம் - | பஞ்சமூர்த்திகள் - வெள்ளி கற்பகவிருக்ஷம், வெள்ளி காமதேனு வாகனம், இதர வெள்ளி வாகனங்கள் |
| 27.11.2017 | 11 | திங்கள் | ஐந்தாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர், மூஷிக வாகனம் கண்ணாடி ரிஷப வாகனம் - | பஞ்சமூர்த்திகள் -வெள்ளி மூஷீகம், வெள்ளி மயில், வெள்ளி பெரிய ரிஷப வாகனம் |
| 28.11.2017 | 12 | செவ்வாய் | ஆறாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர், மூஷிக வாகனம் வெள்ளி யானை - 63 நாயன்மார்கள் விமானங்கள் - | பஞ்சமூர்த்திகள் - வெள்ளி ரதம், வெள்ளி இந்திர விமானம் இதர வெள்ளி விமானங்கள் |
| 29.11.2017 | 13 | புதன் | ஏழாம் திருவிழா | பஞ்சமூர்த்திகள் மஹாரதங்கள் - **தேரோட்டம்** காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள் விருச்சிக லக்கினத்தில் விநாயகர் தேர் வடம் பிடித்தல். - | பஞ்சமூர்த்திகள் - மஹா ரதத்திலிருந்து புறப்பட்டு ஆஸ்தான மண்டபம் வந்து சேருதல் |
| 30.11.2017 | 14 | வியாழன் | எட்டாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர் - குதிரை வாகனம் - | மாலை 4.30 மணிக்கு தங்கமேருவில் பிச்சாண்டவர் உற்சவம், இரவு பஞ்சமூர்த்திகள் குதிரை வாகனம் |
| 01.12.2017 | 15 | வெள்ளி | ஒன்பதாம் திருவிழா | விநாயகர், சந்திரசேகரர் - புருஷா மிருக வாகனம் - | பஞ்சமூர்த்திகள் - கைலாச வாகனம், காமதேனு வாகனம் |
| 02.12.2017 | 16 | சனி | பத்தாம் திருவிழா | அதிகாலை 4.00 மணிக்கு **பரணி தீபம்** பகல் பிரம்மதீர்த்தத்தில் தீர்த்தவாரி. - | பஞ்சமூர்த்திகள் - தங்க விமானங்களில் எழுந்தருளி, அர்த்தநாரீஸ்வரர் காட்சிதர, மாலை 6.00 மணிக்கு ஜோதி ஸ்வரூப **மகா தீபம்** இரவு பஞ்சமூர்த்திகள் - தங்க ரிஷப வாகனம். |
| 03.12.2017 | 17 | ஞாயிறு | தெப்பல் திருவிழா | - | இரவு 9.00 மணிக்கு சந்திரசேகரர் தெப்பல் |
| 04.12.2017 | 18 | திங்கள் | தெப்பல் திருவிழா | - | அதிகாலை அருள்மிகு உண்ணாமுலை உடனுறை அண்ணாமலையார் கிரிவலம் இரவு 9.0 0 மணிக்கு பராசக்தி அம்மன் தெப்பல் |
| 05.12.2017 | 19 | செவ்வாய் | தெப்பல் திருவிழா | - | இரவு 9.00 மணிக்கு சுப்பிரமணியர் தெப்பல் |
| 06.12.2017 | 20 | புதன் | சண்டிகேஸ்வரர் உற்சவம் | - | அருள்மிகு சண்டிகேஸ்வரர் வெள்ளி ரிஷப வாகனம் |

ஆன்மீக சிறப்பு பெற்ற இத்திருக்கோயில் திருவிழா நிகழ்வுகளை மெய்யன்பர்கள் அனைவரும் திரளாக வந்து தீபத்திருவிழா கண்டு சிவனருள் பெற்று மகிழ வேண்டுகிறோம்.

**இரா. ஜெகன்னாதன், M.Com.,B.L.,**
தக்கார் / இணை ஆணையர் / செயல் அலுவலர்

குறிப்பு : இத்திருக்கோயிலில் நடைமுறையில் உள்ள கட்டளை அர்ச்சனை திட்டத்தில் பதிவு செய்வோர்க்கு அவர்களுக்கு உகந்த நாளில், அவர்களது பெயரிலோ அல்லது அவர்கள் விரும்பியவர் பெயரிலோ, அர்ச்சனை செய்து பிரசாதம் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். ஒரு ஆண்டு (12 மாதங்கள்) அர்ச்சனைக்கு ரூ. 250/- நிரந்தர அர்ச்சனைக்கு (ஆயுள் முழுவதும்) ரூ.5000/-. திருக்கோயிலில் நடைபெற்று வரும் அன்னதான திட்டத்தில் பங்கு கொள்ள விருப்பமுள்ளவர்கள் நாள் ஒன்றுக்கு ரூ.7500/-. நிரந்தர முதலீடாக ரூ. 40,000/- செலுத்தினால், அதிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டி தொகையிலிருந்து தாங்கள் விரும்பும் ஒரு நாளில் 100 நபர்களுக்கு அன்னதானம் வழங்க ஆவன செய்யப்படும். நெய்குடம், கட்டளை அர்ச்சனை, அன்னதானம் ஆகிய திட்டங்களுக்கு பணம் அனுப்ப வேண்டிய முகவரி : இணை ஆணையர் / செயல் அலுவலர், அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில். திருவண்ணாமலை - 606 601. தொலைபேசி : 04175 - 252438. Website : http://www.arunachaleswarartemple.tnhrce.in E.mail : arunachaleswarar@tnhrce.org